**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement – 22 - ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) சாகித்ய அகாதெமி விருது பெற்ற அப்துல்ரகுமானின் நூல் யாது?

A) முட்டைவாசிகள் B) ஆலாபனை

C) சுட்டுவிரல் D) குணங்குடியார் பாடற்கோவை

2) வில்லிபாரதம் எத்தனை விருத்தப்பாக்களால் ஆனது?

A) 5027 B) 4321 C) 3615 D) 10589

3) "கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி", "பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்" எனவெல்லாம் போற்றப்படுபவர்?

A) வல்லபாய் படேல் B) ஜவஹர்லால் நேரு C) இரவீந்திரநாத் தாகூர் D) காந்தியடிகள்

4) சாகித்ய அகாதமி வெளியிட்டுள்ள "தாகூரின் கடிதங்கள்" என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர்?

A) சோ.ந. கந்தசாமி B) சிற்பி பாலசுப்ரமணியம்

C) சி.ஏ. பாலன் D) த.நா. குமாரசுவாமி

5) பூக்குலை - இலக்கணக்குறிப்பு தருக.

A) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

B) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

C) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

D) ஏவல் பன்மை வினைமுற்று

6) மனோன்மணீயம் தமிழின் முதல் ____ வடிவ நாடக நூல் ஆகும்

A) கண்ணி B) அந்தாதி C) பா D) பிரபந்தம்

7) மனோன்மணீயம்

A) 3 காண்டங்களையும் 92 படலங்களையும் உடையது

B) 3 காண்டங்களையும் 36 படலங்களையும் உடையது

C) ஐந்து அங்கங்களையும் இருபது களங்களையும் உடையது

D) ஆறு காண்டங்களையும் 123 படலங்களையும் உடையது

8) "தாமரை நெஞ்சம்" என்னும் நூலின் ஆசிரியர்?

A) புதுமைப்பித்தன் B) ஜெயகாந்தன் C) வண்ணதாசன் D) அகிலன்

9) இளஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள்" - என்று திரு.வி.கல்யாணசுந்தரனார் தனது எந்த நூலில் எழுதினார்?

A) பெண்ணின் பெருமை B) இளமை விருந்து

C) பொதுமை வேட்டல் D) முருகன் அல்லது அழகு

10) வியர்வைவெள்ளம் - இலக்கணக்குறிப்பு தருக

A) உவமைத் தொடர் B) உவமைத்தொகை C) உருவகம் D) உம்மைத்தொகை

11) பின்வருவனவற்றுள் சிற்பி பாலசுப்ரமணியம் இயற்றிய நூல்?

A) ஊசிகள்
B) ஊர்வலம்
C) நிலவுப்பூ
D) இன்னொரு தேசியகீதம்

12) "கடந்தடு தானை மூவிருங்கூடி / உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே; முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு; / முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்; / யாமும் பாரியும் உளமே; / குன்றும் உண்டுநீர் பாடினிர் செலின" என்னும் பாடலடிகள் இடம்பெற்ற நூல்?

A) தொல்காப்பியம் B) பதிற்றுப்பத்து C) புறநானூறு D) மதுரைக்காஞ்சி

13) காளை இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கும் கலித்தொகைப் பகுதி?

A) குறிஞ்சிக்கலி B) முல்லைக்கலி C) மருதக்கலி D) பாலைக்கலி

14) "நீர்படு பசுங்கலம்" என்னும் வரிகள் இடம்பெற்ற இலக்கியம்?

A) நற்றிணை B) புறநானூறு C) ஐங்குறுநூறு D) கலித்தொகை

15) உயர்ந்தோர் - இலக்கணக்குறிப்பு தருக.

A) பண்புத்தொகை
B) வினைத்தொகை
C) இடைக்குறை
D) வினையாலணையும் பெயர்

16) அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்களிலில் சேராதது?

A) தண்டியலங்காரம் B) குவலையானந்தம் C) மாறனலங்காரம் D) முத்துவீரியம்

17) தண்டி எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

A) பத்தாம் நூற்றாண்டு
B) பதினொன்றாம் நூற்றாண்டு
C) பன்னிரண்டாம் நூற்றாண்டு
D) பதிமூன்றாம் நூற்றாண்டு

18) பாரதியார் நடத்திய எந்தெந்த இதழ்களில் பரலி. சு. நெல்லையப்பர் துணையாசிரியராகப் பணியாற்றினார்?

A) சுதேசமித்திரன், இந்தியா
B) தர்மம், சக்கரவர்த்தினி
C) பாலபாரதா அல்லது யங் இண்டியா
D) சூரியோதயம், கர்மயோகி

19) **கூற்று:** பார்க், பன்ச், போத், டப் போன்றவை தமிழில்லை

**காரணம்:** வல்லின மெய்யோடு சொல் முடியாது. அப்படி முடிந்தால் அவை தமிழ்ச்சொல்லன்று

A) கூற்று சரி; காரணம் தவறு
B) கூற்று தவறு; காரணம் சரி
C) கூற்று மற்றும் காரணம் சரி
D) கூற்று மற்றும் காரணம் தவறு

20) ஆய்த எழுத்து பற்றிய பின்வரும் வாக்கியங்களில் எது சரி?

1. ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
2. தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும் (அஃது, எஃகு, கஃசு).

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 & 2 D) ஏதுமில்லை

ETW ACADEMY

**21)** ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ____ஆகத் திரிவதுண்டு.

A) னகரம் B) டகரம் C) ணகரம் D) றகரம்

**22)** பின்வருவனவற்றுள் தவறான வார்த்தை எது?

A) உறுப்பினர் B) குழுவினர் C) ஊரினர் D) பெறுனர்

**23)** பிழையான தொடரைக் கண்டறிக.

A) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

B) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

C) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

D) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.

**24)** பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

A) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

B) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

C) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது

D) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

**25)** "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது

தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்?

A) அடிமோனை, அடிஎதுகை B) சீர் மோனை, சீர் எதுகை

C) அடிஎதுகை, சீர் மோனை D) சீர் எதுகை, அடிமோனை

**26)** "வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் புகழப்படுபவர்?

A) வள்ளலார் B) ஆறுமுக நாவலர் C) வையாபுரிப்பிள்ளை D) உ.வே.சா

**27)** முச்சங்கங் கூட்டி / முதுபுலவர் தமைக் கூட்டி / அச்சங்கத் துள்ளே / அளப்பரிய பொருள்கூட்டி / சொற்சங்க மாகச் / சுவைமிகுந்த கவிகூட்டி / அற்புதங்க ளெல்லாம் / அமைத்த பெருமாட்டி!- என்னும் பாடலை இயற்றிய கவிஞர்?

A) பாரதிதாசன் B) வாணிதாசன் C) கண்ணதாசன் D) காளிதாசன்

**28)** மொழி வரலாறு என்ற நூலின் ஆசிரியர்?

A) மறைமலையடிகள் B) வ.சுப. மாணிக்கம்

C) இரா.பி. சேதுபிள்ளை D) மு. வரதராசனார்

**29)** சித்தர்களைக் குறிக்கும் "நிறைமொழி மாந்தர்" என்னும் சொல் காணப்படும் நூல்கள்?

A) நன்னூல், நாலடியார்

B) தொல்காப்பியம், திருக்குறள்

C) வீரசோழியம், இன்னா நாற்பது

D) நம்பியகப்பொருள், ஆசாரக்கோவை

ETW ACADEMY

**30)** சித்தர்களில் ஆதிச்சித்தராகக் கருதப்படுபவர்?

A) திருமூலர் B) கடுவெளிச் சித்தர் C) வள்ளலார் D) பத்திரகிரியார்

**31)** பொருந்தாதது எது?

A) சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ? - சிவவாக்கியர்

B) சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம் - பாம்பாட்டி சித்தர்

C) ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே / சாதிவகை இல்லாது சஞ்சரிப்பது எக்காலம் - திருமூலர்

D) மேற்கண்ட ஏதுமில்லை

**32)** தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே! - ஒரு / தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே! / நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே - அங்கே / நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே! - என்ற பாடலை இயற்றியவர்?

A) சட்டைமுனி B) இடைக்காடர் C) வள்ளலார் D) பத்திரகிரியார்

**33)** கவிஞர் பிரமிளின் இயற்பெயர் எது?

A) கல்யாணசுந்தரம் B) வைத்தியலிங்கம் C) மா.ராமலிங்கம் D) சிவராமலிங்கம்

**34)** பின்வரும் எப்பெயர் பிரமிளின் புனைப்பெயர் அல்ல?

A) பானுச்சந்திரன் B) அரூப் சிவராமு

C) தருமு சிவராமு D) லங்காபுரி சிவராமு

**35)** அப்துல் ரகுமானின் நூல்களில் சேராதது எது?

A) இரத்ததானம் B) நேயர் விருப்பம் C) பால்வீதி D) பித்தன்

**36)** அப்துல் ரகுமான் பெற்ற விருது அல்லாதது?

A) சாகித்ய அகாதமி B) பாரதிதாசன் விருது

C) பாரதியார் விருது D) தமிழ்ப் பலகலைக்கழகத்தின் தமிழன்னை விருது

**37)** உடை அணிந்தேன் - இலக்கனக்குறிப்பு அறிக

A) ஐந்தாம் வேற்றுமைத்தொகை B) நான்காம் வேற்றுமைத்தொகை

C) மூன்றாம் வேற்றுமைத்தொகை D) இரண்டாம் வேற்றுமைத்தொகை

**38)** பொருந்தாதது எது?

A) ஈகையும் செல்வமும் – உம்மைத்தொகை B) முத்தியும் பெறுதி - உயர்வு சிறப்பும்மை

C) நிகர் அலன், பொருள் எலாம் - இடைக்குறை விகாரங்கள்

D) வாழ்அயன், செய்புண்ணியம் - வினைத்தொகைகள்

**39)** தமிழ்ச்சிறுகதை போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதால் "சிறுகதை மன்னர்" என்று போற்றப்படுபவர்?

A) மௌனி B) புதுமைப்பித்தன்

C) ஜெயகாந்தன் D) அசோகமித்திரன்

ETW ACADEMY

40) பின்வருவனவற்றுள் சரியாக இடம்பெறும் தொடர் எது?

A) மறைமலையடிகள் மரணத்தின்பின் மனிதர்நிலை என்னும் நூலை இயற்றினார்

B) மறைமலையடிகள், மரணத்தின்பின் மனிதர்நிலை என்னும் நூலை இயற்றினார்

C) மறைமலையடிகள், 'மரணத்தின்பின் மனிதர்நிலை' என்னும் நூலை இயற்றினார்

D) மேற்கண்ட அனைத்தும்

41) பின்வரும் நூல்களில் இராமலிங்க அடிகளார் இயற்றாத நூல் எது?

A) தெய்வமணிமாலை B) கந்தர் சரவணப்பத்து

C) மநுமுறைகண்ட வாசகம் D) திருவிரட்டைமணிமாலை

42) இராமலிங்க அடிகளார் பதிப்பித்த நூல்களில் சேராதது?

A) ஒழிவில் ஒடுக்கம் B) தொண்டமண்டல சதகம் C) யாப்பெருங்கலம் D) சின்மய திபீகை

43) "கீதாஞ்சலி" என்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்காக தாகூர் நோபல் பரிசு வென்ற ஆண்டு?

A) 1910 B) 1913 C) 1921 D) 1916

44) தமிழ்-வங்க மொழிகளுக்கு த.நா.குமாரசாமி ஆற்றிய தொண்டைப் பாராட்டி _____ அரசு, _____ விருதினை அவருக்கு அளித்துச் சிறப்பித்துள்ளது.

A) தமிழக அரசு, நேதாஜி விருதை B) வங்க அரசு, தாகூர் விருதை

C) தமிழக அரசு, தாகூர் விருதை D) வங்க அரசு, நேதாஜி விருதை

45) கவிஞர் இன்குலாபின் இயற்பெயர் என்ன?

A) மஸ்தான் சாகிப் B) அப்துல் ஹமீது

C) சாகுல் அமீது D) அகமது மரைக்காயர்

46) கவிஞர் இன்குலாபின் கவிதைகள் அனைத்தும் எப்பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன?

A) காந்தள் நாட்கள்

B) இன்குலாப் கவிதைகள்

C) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்

D) மனுசங்கடா... நாங்க மனுசங்கடா

47) மனோன்மணியம் என்ற நூல், ____ துறைக்கு தமிழில் நூல்கள் இல்லையே என்றக் குறையை தீர்க்கவந்ததாக உள்ளது

A) இயல் துறை B) இசைத்துறை C) நாடகத்துறை D) காவியத்துறை

48) தமிழ் நாடக இலக்கண நூல்களில் சேராதது?

A) அகத்தியம் B) இறையனார் அகப்பொருள் C) செயன்முறை D) குணநூல்

49) இரகசிய வழி (The secret Way) என்ற நூலைத் தழுவித் தமிழில் மனோன்மணீயம் என்ற நூலை பேராசிரியர் சுந்தரனார் எழுதிய ஆண்டு?

A) 1890 B) 1893

C) 1891 D) 1882

ETW ACADEMY

**50)** பின்வருவனவற்றுள் திரு.வி.க இயற்றிய நூல்களில் சேராதது?

A) பெண்ணின் பெருமை
B) முருகன் அல்லது அழகு
C) மருமக்கள் வழி மான்மியம்
D) மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

**51)** சித்தர்களில் கலகக்காரர் எனப்படுபவர்?

A) மச்சமுனி B) சிவவாக்கியார் C) கமல முனி D) இடைக்காடர்

**52)** "ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டிலை" என்று குறிப்பிடும் நூல்?

A) பெரிய புராணம் B) திருவாசகம் C) தருக்கோவையார் D) திருமந்திரம்

**53)** குண்டலினி சக்தியை உச்சியில் ஏற்றி அமுதம் உண்ணும் நிலையைக் கூறும் சொல் எது?

A) தேங்காய்ப்பால் B) மாங்காய்ப்பால் C) முப்பால் D) பலாப்பால்

**54)** பிரமிளின் கட்டுரைத் தொகுப்பு எது?

A) வெயிலும் நிழலும்
B) அறம்
C) அகம் புறம்
D) வட்டியும் முதலும்

**55)** அயன் - என்பவர்?

A) பிரம்மன் B) விஷ்ணு C) சிவபெருமான் D) இந்திரன்

**56)** வில்லிபாரதம் எம்மொழியில் எழுதப்பட்ட இதிகாசம் ஆகும்?

A) தமிழ் B) வடமொழி C) இந்தி D) இந்திஸ்தானி

**57)** புதுமைப்பித்தனின் இயற்பெயர்?

A) சொ. விருத்தாசலம் B) துரைராசு C) மாணிக்கம் D) இராதாகிருஷ்ணன்

**58)** சரியான நிறுத்தக்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்க.

A) மலரவன் தன் பாட்டியிடம் நான் படிக்கிறேன் என்றான்.
B) மலரவன், தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.
C) மலரவன் தன் பாட்டியிடம், "நான் படிக்கிறேன்" என்றான்.
D) மலரவன் தன் பாட்டியிடம், நான் படிக்கிறேன்! என்றான்.

**59)** கற்றேன் என்பாய் கற்றாயா? - வெறும்
காகிதம் தின்பது கல்வியில்லை - இவ்வடிகளில் பயின்று வருவது

A) அடிஎதுகை, அடிமோனை
B) சீர்மோனை, அடிஎதுகை
C) அடிமோனை, அடி இயைபு
D) சீர்மோனை, அடிமோனை

**60)** சிற்பி பாலசுப்ரமணியத்திற்கு சாகித்ய அகாதமி விருது பெற்றுத்தந்த நூல்?

A) அப்பாவின் சிநேகிதர்
B) மின்சாரப்பூ
C) சூடிய பூ சூடற்க
D) ஒரு கிராமத்து நதி

ETW ACADEMY

61) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணம் என தி.சு நடராசன் சுட்டும் இலக்கண நூல்?

A) அகத்தியம் B) தொல்காப்பியம் C) நன்னூல் D) தண்டியலங்காரம்

62) "புணரின் புணராது பொருளே; பொருள்வயின் / பிரியின் புணராது புணர்வே" - இப்பாடல் இடம்பெறும் சங்க நூல் எது?

A) நற்றிணை B) புறநானூறு C) ஐங்குறுநூறு D) கலித்தொகை

63) தி.சு. நடராசனின் நூல்களில் சேராதது எது?

A) தமிழ் அழகியல் B) திறனாய்வுக்கலை
C) கவிதையெனும் மொழி D) ஒரு சிறு இசை

64) "ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி / ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள் / மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது / தன்னேர் இலாத தமிழ்" - இப்பாடலில் பயின்று வரும் அணி?

A) பொருள் வேற்றுமை அணி B) இல்பொருள் உவமை அணி
C) பின்வருநிலையணி D) சொல் பின்வருநிலையணி

65) பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப் பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர்?

A) பரலி சு. நெல்லையப்பர் B) இளசை மணி
C) பாரதிதாசன் D) கவிஞர் தமிழ்ஒளி

66) சரியான தொடர் எது?

A) முப்பத்திநான்கு B) நாப்பத்திமூன்று
C) நாற்பத்துமூன்று D) நாற்ப்பத்துமூன்று

67) தவறான வாக்கியம் எது?

A) வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் என்னும் மெய்களைத் தொடர்ந்து மெய்கள் வருவதில்லை
B) க், ச், த், ப் ஆகியவற்றின்பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வாரா
C) ட் , ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, ப என்னும் வரிசைகளுமே வரும்.
D) ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வருவதுண்டு

68) எந்த எழுத்துகளில் முடியும் சொற்கள் அரிதாக உள்ளன?

A) க்,ங்,ச் B) ஞ்,ந்,வ் C) ம்,ம்,ய் D) ர்,ல்,ள்

69) “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

1. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
2. பொதிகையில் தோன்றியது
3. வள்ளல்களைத் தந்தது

A) 1 மட்டும் சரி B) 1 & 2 ஆகியவை சரி
C) 3 மட்டும் சரி D) 1 & 3 ஆகியவை சரி

ETW ACADEMY

70) ஆறுமுக நாவலருக்கு "நாவலர்" பட்டம் வழங்கியது எது?
A) திருவாவடுதுறை ஆதினம் B) தருமபுரம் ஆதினம்
C) மதுரை ஆதினம் D) திருப்பனந்தாள் ஆதினம்

71) சித்தர்களைப் பொறுத்த அளவில் "வீடுபேறு" என்பது?
A) ஆன்மாவை அறிதல் B) பிறரை அறிதல் C) தன்னை அறிதல் D) உலகை அறிதல்

72) அட்டமா சித்திகளில் பொருந்தாதது எது?
A) அணுவைப்போல சிறுத்து நிற்கும் ஆற்றல் - அணிமா
B) வரையறையற்று விரிந்து படரும் ஆற்றல் - மகிமா
C) காற்றில் மிதக்கும் ஆற்றல் - லகிமா
D) எங்கும் வியாபித்திருக்கும் ஆற்றல் - பிரகாமியம்

73) கற்றேன் - இலக்கணக்குறிப்பு தருக.
A) பெயரெச்சம் B) வினையெச்சம்
C) தன்மை ஒருமை வினைமுற்று D) இரண்டாம் வேற்றுமைத்தொகை

74) கண்மலர் - இலக்கணக்குறிப்பு தருக.
A) உருவகம் B) உவமைத்தொகை
C) பண்புத்தொகை D) உரிச்சொல் தொடர்

75) பல்வேறு வகையான நிறுத்தக்குறிகளை அறிமுகப்படுத்தி, எவ்விடங்களில் அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென விளக்கியவர்கள்?
A) தமிழர்கள் B) மங்கோலியர்கள் C) ஆப்பிரிக்கர்கள் D) ஐரோப்பியர்கள்

76) இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் நூல்கள் பல எழுதியுள்ள தாகூர் பற்றிய தவறான வாக்கியம் எது?
A) இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப்பாடல்களை இயற்றியுள்ளார்
B) ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளை இயற்றியுள்ளார்
C) ஏறக்குறைய இருபது பெருநாடகங்கள், குறுநாடகங்களை இயற்றியுள்ளார்
D) எட்டு நாவல்கள், எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகளை இயற்றியுள்ளார்

77) விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை தாகூர் நிறுவிய ஆண்டு?
A) 1913 B) 1926 C) 1920 D) 1921

78) கடிநகர், சாலத்தகும் - இலக்கனக்குறிப்பு தருக
A) வினைத்தொகைகள் B) வினையெச்சங்கள்
C) உரிச்சொற்றொடர்கள் D) பெயர்ச்சொற்கள்

79) புல்புழு, இராப்பகல் - இலக்கணக்குறிப்பு தருக.
A) உருவகங்கள் B) உவமைத்தொகைகள்
C) எண்ணும்மைகள் D) உம்மைத்தொகைகள்

80) மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை?

A) சிவகாமியின் சபதம்
B) சிவகாமியின் சரிதம்
C) கடல்புறா
D) பார்த்திபன் கனவு

81) "உள்ளத்து உள்ளது கவிதை / இன்ப உருவெடுப்பது கவிதை" என்றவர் யார்?

A) கவிமணி
B) வலம்புரிஜான்
C) மு. மேத்தா
D) வல்லிக்கண்ணன்

82) சிற்பி பாலசுப்ரமணியம், எம்மொழியிலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்துள்ளார்?

A) மலையாளம்
B) கன்னடம்
C) தெலுங்கு
D) மேற்கண்ட அனைத்தும்

83) "நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை" - என்று கூறும் நூல்?

A) குறுந்தொகை
B) நெடுநல்வாடை
C) புறநானூறு
D) பட்டினப்பாலை

84) "ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி / ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள் / மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது / தன்னேர் இலாத தமிழ்" - எனும் பாடல் இடம்பெறும் நூல்?

A) நம்பியகப்பொருள்
B) தண்டியலங்காரம்
C) நன்னூல்
D) தொன்னூல் விளக்கம்

85) பரலி நெல்லையப்பர் யாருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார்?

A) வேங்கடகிருஷ்ண எட்டப்பர்
B) பாரதியார்
C) வ.உ.சிதம்பரனார்
D) சுப்ரமண்ய சிவா

86) லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் _____ஆகத் திரிவதுண்டு.

A) னகரம்
B) டகரம்
C) ணகரம்
D) றகரம்

87) ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்களில் சேராதது?

A) திருக்குறள் பரிமேலழகர் உரை
B) சூடாமணி நிகண்டு
C) நன்னூல் - சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை
D) சீவக சிந்தாமணி

88) "சித்தர்கள்களைக் கிளர்ச்சியார்ளர்கள்" என்று கூறிய அறிஞர்?

A) கார்த்திகேசு சிவத்தம்பி
B) க. கைலாசபதி
C) நா. வானமாமலை
D) இராசமாணிக்கனார்

89) "உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே" "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" - போன்ற புகழ்ப்பெற்ற பாடலடிகளைத் தந்தவர்?

A) கடுவெளிச் சித்தர்
B) திருமூலர்
C) வள்ளலார்
D) தாயுமானவர்

90) ஓவியத்திற்கு ஒப்பானதாகப் போற்றப்படும் கவிதை வடிவம்?

A) மரபுக்கவிதை
B) புதுக்கவிதை
C) ஹைக்கூ
D) சென்றியு

ETW ACADEMY

91) பொருள் தருக: துரதகம்

A) புலி B) சிங்கம் C) கரடி D) குதிரை

92) வில்லிப்புத்தாரை, வக்கபாகை என்னுமிடத்தை ஆண்டுவந்த மன்னரான ____ என்பவர் ஆதரித்தார்

A) விஜயரகுநாத தொண்டைமான் B) விஜயரகுநாத சேதுபதி

C) சடையப்ப வள்ளல் D) வரபதி ஆட்கொண்டான்

93) பழங்காலத்தில் பனை ஓலைகளிலோ கல்வெட்டுகளிலோ ஒரு பாடல் அல்லது உரைநடைப்பகுதி எழுதி முடித்தமைக்கு அடையாளமாக அமைவது யாது?

A) ஓலை இறுதியில் சுழியம் இடுதல் (o) B) இணைக்கோடுகள் இடுதல் (//)

C) கோடு இடுதல் (/) D) மேற்கண்ட அனைத்தும்

94) தாகூரின் "அமர் சோனார் பங்களா" என்ற பாடல் எந்த தேசத்தின் நாட்டுப்பண்ணாகும்?

A) பாகிஸ்தான் B) வங்காள தேசம்

C) ஆப்கானிஸ்தான் D) மேற்கு வங்க மாநிலம்

95) பின்னிய, முளைத்த - இலக்கணக்குறிப்பு தருக.

A) பெயரெச்சங்கள் B) வினையெச்சங்கள்

C) பண்புத்தொகைகள் D) உரிச்சொற்றொடர்கள்

96) இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர்?

A) பிரித்திகா யாஷினி B) தாரிகா பானு

C) லிவிங்ஸ்மைல் வித்யா D) ஜோயிதா மோண்டல் மாஹி

97) கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெறும் மரபு?

A) பெயர்மரபு B) வினைமரபு C) ஒலிமரபு D) இவை மூன்றும்

98) பேராசிரியர் சுந்தரனார் பற்றியப் பின்வரும் தகவல்களில் தவறானது எது?

A) திருவிதாங்கூரிலுள்ள ஆலப்புழையில் 1855 இல் பிறந்தார்

B) திருவனந்தபுரம் அரசுக்கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார்

C) சென்னை மாகாண அரசு இராவ் பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது

D) தமிழ்நாடு அரசு இவர் பெயரில் மதுரையில் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ளது

99) திரு.வி.க ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்?

A) குயில், தென்றல் B) சுதேசமித்திரன், இந்தியா

C) தேசபக்தி, நவசக்தி D) பாலபாரதி, தர்மம்

100) சிற்பி பாலசுப்ரமணியத்தின் உரைநடை நூல் அல்லாதது?

A) இலக்கியச் சிந்தனைகள் B) இலக்கியச் சுவடுகள்

C) மலையாலக் கவிதை D) அலையும் சுவடும்

***

© ETW Academy

ETW ACADEMY